## கல்வியியற்போட்டி 2025

# குறிப்பு

## கட்டுரைப்போட்டி

- **இவ்வாண்டு மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டிக்கு அணியம் செய்வதற்கு (தயார்படுத்துவதற்கு) 4 தலைப்புகள் முன்னரே வழங்கப்படும். மாணவர்கள் இத் தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிப் பழகுதல் வேண்டும்.**
- போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்பட்ட 4 தலைப்புகளில் ஒன்றை கல்வியியற்போட்டிக் குழுவினர் தெரிவு செய்து, மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியில் கட்டுரை எழுதுவதற்கு வழங்கப்படும்.
- தயார்ப்படுத்திய குறிப்புகள், கட்டுரைகள் எவையும் போட்டி நடைபெறும் மண்டபத்துக்குள் கொண்டு வருவதற்கு அனுமதியில்லை.
- அணியம் செய்வதற்கான தலைப்புகள் வகுப்பு வட்சப் (whatsapp) குழுமங்களில் போடப்படும்.
- கட்டுரைப் போட்டியில் கூடுதலான மாணவர்கள் பங்குபெற ஊக்குவிக்கும் நோக்குடன் இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## நிழற்படம் பார்த்துப் பேசுதல் (இயல்பாக அமைதல்)

## போட்டி விதிமுறை:

- **இவ்வாண்டு மாணவர்களுக்கு நிழற்படம் பார்த்துப் பேசுதற் போட்டிக்கு: அணியம் செய்வதற்கு (தயார்படுத்துவதற்கு) 4 தலைப்புகள் முன்னரே வழங்கப்படும். மாணவர்கள் இத் தலைப்புகளில் பேசுவதற்கு அணியம் செய்தல் வேண்டும்.**
- போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்பட்ட 4 தலைப்புகளில் **ஒன்றை** கல்வியியற்போட்டிக் குழுவினர் தெரிவு செய்து, பேசுவதற்கு மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- தயார்ப்படுத்திய குறிப்பகள், எவையும் போட்டி நடைபெறும் மண்டபத்துக்குள் கொண்டு வருவதற்கு அனுமதியில்லை.
  - மாணவர்கள் நிழற்படக்காட்சியைப் பற்றி 60 நிமிடங்களுக்குள் பேசுவதற்குத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
  - காட்சியின் கருப்பொருளைப் பற்றித் தங்கள் கற்பனையில் மூன்று நிமிடங்களுக்குள் பேசுதல் வேண்டும். (பேசும்முறையானது இயல்பாக அமைதல் வேண்டும்.
  - போட்டியில் பங்குபற்ற விண்ணப்பம் அனுப்பியோர் போட்டி நடைபெறும் நாளில் சமுகமளிக்கவேண்டும்.